தொகுதி மறுவரையறை நிலைப்பாட்டில் ‘பல்டி’ தமிழ்நாட்டில் மட்டும்தானா?

நச்சுப் பாம்பான காங்கிரசின் உண்மையான நிலைதான் என்ன?

மக்களவை கழகக் குழுத் துணைத் தலைவர் தயாநிதிமாறன் கடும் கண்டனம்!

சென்னை, ஆக. 12- தொகுதி மறுவரையறையில் இரட்டை வேடம் போடும் நச்சுப் பாம்பான காங்கரசின் உண்மையான நிலைப்பாடு தான் என்ன? தொகுதி மறுவரையறை நிலைப்பாட்டில் ‘பல்டி’ தமிழ்நாட்டில் மட்டும் தானா? என மக்களவை கழகக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கழக நாடாளுமன்றத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் அவர்களின் வலைத்தள பதிவு பின்வருமாறு:

Delimitation: தமிழ்நாட்டில் மட்டும் NoDelimitation நாடகம் ஏன்? தங்கள் Proxy அரசை வைத்து எம்.பி.க்கள் கூட்டம் நடத்தும் காங்கிரஸ், தான் ஆளும் நான்கு மாநிலங்களில் ஏன் அமைதியாக இருக்கிறது? தொகுதி மறுவரையறையை ஆதரித்த ரேவந்த் ரெட்டி அவர்களைக் கேள்வி கேட்கத் துணியுமா?

த.வெ.க. அரசைத் தூண்டிவிட்டு, தொகுதி மறுவரையறைக்கு எதிராகத் தமிழ்நாட்டில் எம்.பி.க்கள் கூட்டம்

என்று நாடகமொன்றை அரங்கேற்றிய காங்கிரஸ் கட்சியின் உண்மையான நிலைப்பாடு தான் என்ன?

FairDelimitation என்ற நிலைப்பாட்டிலிருந்து NoDelimitation என்று அடித்திருக்கும் பல்டி தமிழ்நாட்டில் மட்டும்தானா? இல்லை, அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்துமா?

அப்படியெனில், காங்கிரஸ் ஆளும் நான்கு மாநிலங்களில் இப்படியான எம்.பி.க்கள் கூட்டத்தை ஏன் நடத்தவில்லை?

NoDelimitation என்று இங்கு நாடகமிடும் காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சர்களில் ஒருவரான ரேவந்த் ரெட்டி அவர்கள், Delimitation நடந்தால் தெலங்கானா மாநிலத்தின் பிரதிநித்துவம் அதிகரிக்கும் என்று பேசியிருப்பது ஏன்?

தொகுதி மறுவரையறையில் தெளிவான நிலைப்பாடின்றி இருக்கும் காங்கிரஸ் கட்சி, தமிழ்நாட்டில் செய்வது PettyPolitics அன்றி வேறல்ல.

நச்சுப்பாம்பாக விளங்கும் காங்கிரஸ் கட்சியின் Proxy அரசை நடத்திக் கொண்டிருக்கும் ரீல்ஸ் கட்சியின் ரீல்களை மக்கள் நம்ப மாட்டார்கள்.

இவ்வாறு தயாநிதி மாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழிக்கு பெருமை சேர்த்தது திராவிட முன்னேற்றக் கழகம்!

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுக்காக சட்டம் இயற்ற வேண்டும்!

சட்டப்பேரவையில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் குறித்த தனி தீர்மானத்தை வரவேற்று முனைவர் கோவி, செழியன் பேச்சு!

சென்னை, ஆக.12- சட்டப்பேரவையில் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடல் குறித்து முதலமைச்சர் கொண்டுவந்த தனித் தீர்மானத்தை தி.மு.கழகம் சார்பில் வரவேற்று முனைவர் கோவி. செழியன் பேசினார். அப்போது அவர் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை முதலில் பாட சட்டமியற்றி தாருங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப்பேரவையில் முதல்வர் கொண்டுவந்த தமிழ்த் தாய்த் வாழ்த்து தனித்தீர்மானத்தை தி.மு.க. சார்பில் வரவேற்று முனைவர் கோவி.செழியன் பேசிய தாவது:

பேரவைத் தலைவர் அவர்களே, வெண்தாடி வேந்தர் தந்தை பெரியாரை வணங்குகிறேன். காஞ்சி மன்னன் கடமை கண்ணியம் கட்டுப் பாட்டைக் கற்றுத் தந்த பேராசான் அறிஞர்அண்ணாவை வணங்குகிறேன்.

என்னைக் கடலில் தூக்கி எறிந்தாலும் நான் கட்டுமரமாக மிதப்பேன் நீங்கள் சவாரி செய்யலாம் என்று தியாக உள்ளத்தோடு வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

எங்கள் இயக்கத் தலைவர் ஓய்வறியா உழைப்பாளி அண்ணன் தளபதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன்.

எங்களை இயக்குகிற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின்அவர்களை வணங்குகிறேன்.

பேரவைத்தலைவர்அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், முன் வரிசைத் தலைவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னை 2011, 2016, 2021, 2026 தேர்தல்களில் நான்கு முறை திருவிடைமருதூர் தொகுதியில் தேர்வு செய்த எனது தொகுதி மக்களுக்கும் மனமார்ந்த நன்றியைச் சொல்லி,

பேரவைத் தலைவர் அவர்களே முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற தமிழ்த்தாய் பாடல் குறித்த தனித் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வழிமொழிகிறேன், வழிமொழிகிறேன், வழிமொழிகிறேன் ஆதரிக்கிறேன்.

இந்தச்சொற்றொடரை பயன்படுத்த காரணமாக இருந்த ஆருயிர் அண்ணன் தலைவர் தளபதி அவர்களுக்கும், வாய்ப்பினை வழங்கிய எதிர்க்கட்சித் தவைர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் மற்றும் கொறடா அவர்களுக்கும்திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் 1891 இல் பாயிரம் என்ற பாடலில் எழுதப்பட்ட வரிகள். அருமையான சொற்றொடர்கள். என்றும் இளமை குறையாத மொழி தமிழ் மொழி என்பதை நிரூப்பித்த பாடல். இப்பாடல் 1970 இல் முதலமைச்சர் தந்திருக்கின்ற தனித் தீர்மானத்தின் படி 11.3.1970 தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் அரசு நிறுவனங்களில், பள்ளிகளில், கல்லூரிகளில், பொது நிறுவனங்களில் பல் கலைக்கழகங்களில் பாடிட வேண்டும் என்று அந்தப் பாடலை முதன் முதலில் அரசாணை வெளியிட்டு இது தான் தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் என்ற பாட வைத்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்மொழிக்கு என்று சில சிறப்புகள் உண்டு. தாயைப் பழித்தவனை யார் தடுத்தாலும் விடேன், தமிழைப் பழித்தவனை தாய்த் தடுத்தாலும் விடேன் என்று வீரப் பெருமை பேசுகின்ற தமிழர்களாகிய நாம் இன்றைக்கு தமிழ்த்தாய் வாழ்த்துக்கு மூன்றாமிடம் என்று சொல்கின்ற போதுதான் மிகுந்த அவமானத்துக்குரியவர்களாக மாறினோம். தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்து அரசாணையை பல முறை பாடப்பட்ட போதும் கவனக்குறைவாக இருப்பது, அலட்சியப் படுத்துவது என்று நிலை இருந்தது.

யார் அலட்சியப்படுத்தினார்கள் என்ற விவாத தத்திற்குள் நாள் போக விரும்பவில்லை. இதை அறிந்த முன்னாள் முதலமைச்சர் எங்கள் கழகத்தின் தலைவர் ஆருயிர் அண்ணன் தளபதி அவர்கள் முதலமைச்சர் வடித்திட்ட அந்த தனித்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியின்படி 2021 டிசம்பர்12 இல் கட்டாயம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்பட வேண்டும் என்று அரசாணை வெளியிட்டு அதனை நிலைநிறுத்திய பெருமையும் திராவிட முன்னேற்றக் கழகத்தை சாரும்.

அதனைத் தொடர்ந்து தமிழ்மொழியின் பெருமையை சொல்லக்கூடிய வகையில் நீச மொழி என்று பேசப்பட்ட தமிழை தேச மொழி ஆக்கி செம்மொழி ஆக்கியது அன்புத் தலைவர் கலைஞரின் திராவிட முன்னேற்றக் கழகம்.

உலகத்தமிழ் மாநாட்டை நடத்தி உலகத்திற்கு தமிழ் மொழியின் பெருமையச் சொன்னது அன்புத்தலைவர் கலைஞரின் திராவிட முன்னேற்றக் கழகம்

சென்னையில் செம்மொழி தமிழ்ஆய்வு நிறுவனத்தை கொண்டு வந்து தமிழ்மொழி சிறக்க அரிய பல பணிகளைச் செய்தது திராவிடமுன்னேற்றக் கழகம்.

கரந்தையில் பாடப்பட்ட அந்தத் தமிழ்ச்சங்க பாடல், இன்றைக்கு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வெந்த புண்ணில் வேல் என்பது போல், எந்த பாடலை யாத்துத் தந்தாரோ அந்தப் பல்கலைக் கழகத்தில் தாய்மொழியின் அடையாளமாக இருக்கின்ற தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் மூன்றாம் இடம் தள்ளப்பட்ட வேதனை.

அனைத்துக் கட்சிகளும் கண்டித்த நிலையில் எங்கள் கழகத்தின் தலைவர் கடுமையான முறையில் கண்டித்தார். எதிர்த்தார். அதற்கும் ஒரு செயல்வடிவம் கொடுக்கக்கூடிய வகையில்தான் இன்றைக்கு தனித்தீர்மானத்தை நாம் கொண்டுவந்து இருக்கின்றோம் சட்டப் பேரவையில் என்றைக்கும் நினைத்துப் பார்க்கும்.

இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் ஆதரிக்கின்ற இந்த நேரத்தில் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் தந்தது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை கொண்டு வந்தது கலைஞர் திராவிட முன்னேற்றக் கழகம்

அதை சட்டப்படி கொண்டு வர வேண்டும் என்று ஆணைப் பிறப்பித்தது தளபதி மு.க.ஸ்டாலின். திராவிட முன்னேற்றக் கழகம். அதை தொடர் ஓட்டமாக எடுத்துச் சென்று அதை கட்டிக் காத்த பெருமை எங்கள் எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின். திராவிட முன்னேற்றக் கழகம்

இவ்வளவு சிறப்புகளை கொண்ட தமிழ்மொழிக்கும் தமிழ்த்தாய் வாழ்த்துக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆதரிக்கிறோம்.

ஆனால் முதலமைச்சரும், இந்த அவையும், பேரவைத் தலைவரும் அதனை சட்டமாக்கித் தந்தால் எவரும் இந்த தவறுக்கு பொறுப்பாக மாட்டார்கள், அதற்கு நிலையான உறுதியான இரும்புத் தன்மையான அதிகாரம் கிடைக்கும் என்ற நிலையில் ஆதரிக்கிற அதே நேரத்தில் சட்டவடிவமாக்கித் தாருங்கள் என்ற வேண்டுகோளை வைத்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்று அமைகிறேன்.

இவ்வாறு கோவி.செழியின் முதலமைச்சரின் தனித் தீர்மானத்தை தி.மு.க. சார்பில் வரவேற்றார்.

இத்தீர்மானம் பேரவையில் ஒருமனதாக நிறைவேறியது.

பயிர்க் காப்பீட்டுத் திட்டங்களின் உதவியால்

தமிழ்நாட்டின் விவசாயிகளுக்கு குறிப்பிடத்தக்க நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளதா?

மாநிலங்களவையில் எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 12- திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் 7 ஆகஸ்ட் 2026 அன்று மாநிலங்களவையில் பயிர்ப் காப்பீட்டு திட்டங்களின் உதவியால். தமிழ் நாட்டின் விவசாயி களுக்கு குறிப்பிடத்தக்க நிதியுதவி ஒன்றிய அரசால் வழங்கப்பட்டுள்ளதா? என்றும், வானிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள், பயிர் காப்பீட்டு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுமா? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் விவசாயத் துறை இணையமைச்சர் ராம்நாத் தாகூர் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் விவசாயத் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:

விதைத்தலுக்கு முன்னதாக ஏற்படும் இழப்புகள், அறுவடைக்கு பிந்தைய இழப்புகள் ஆகியவற்றிலிருந்து விவசாயிகளை மீட்டு எடுக்க, பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தில் ஒன்றிய அரசு வழிவகைகளை செய்துள்ளது என்றும், வறட்சி, வெள்ளம், நிலச்சரிவு, புயல், காட்டுத் தீ, அதிகமான மழை ஆகியன காரணங்களால் விவசாயிகளின் பயிருக்கு ஏற்படும் இழப்புகளை தாங்கும் வகையில் பயிர் காப்பீட்டு திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், தோட்டப் பயிர்களுக்கான இழப்புகளை கணக்கிட தேவையான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்றும், மாநில அரசுளின் உரிய காப்பீட்டு பங்கு விவசாயிகளுக்கு அளிக்கப்படாதது, வங்கிகளினால் உரிய நேரத்தில் பயிர் காப்பீட்டு கட்டணம் செலுத்தப்படாதது, பயிர் விளைச்சல் கணக்கீடுகள் சரியாக தரப்படாதது, போன்ற காரணங் களினால் பயிர் காப்பீட்டு தொகை விவசாயிகளுக்கு முறையாக கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது என்று ஒன்றிய விவசாயத் துறை இணையமைச்சர் அவர்கள் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

இந்திய விவசாய ஆராய்ச்சி குழுமத்தின் உதவியுடன் பயிர் காப்பீட்டிற்கான வறட்சி மற்றும் வெள்ளத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது என்றும், இந்திய வானிலைத் துறை உதவியுடன் பயிர்காப்பீட்டு 18 மாவட்டங்கள் மிகவும் பாதிப்புக்குள்ளானவை என்று அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், கணிணி செயலிகள் மூலம் தேசிய பயிர் பாதுகாப்பு விவரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றது என்றும், உரிய காலத்தில் பயிர் காப்பீடு வழங்கபடா விட்டால் 12 சதவீதம் வட்டி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கபட்டு வருகிறது என்றும், தமிழ்நாட்டில் புயல் நிவாரண நிதி வழங்கப்படும் போது பயிர் காப்பீட்டு தொகைகளும் வழங்கப்பட்டு வருவதாக ஒன்றிய அரசின் விவசாயத் துறை இணையமைச்சர் ராம்நாத் தாகூர் அவர்கள் மாநிலங்களவையில் திமுக மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

தமிழ்நாட்டின் கிராமப்புற இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி விரிவுபடுத்தப்படுமா?

மக்களவையில் காஞ்சிபுரம் க.செல்வம் எழுப்பிய கேள்விகளுக்கு ஒன்றிய அரசு பதில்!

புதுடெல்லி, ஆக. 12- தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை விரிவுபடுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து, காஞ்சிபுரம் மக்களவை உறுப்பினர் க. செல்வம் நாடாளுமன்ற மக்களவையில் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் பதிலளித்துள்ளது.

ஒன்றிய அரசின் ‘ஸ்கில் இந்தியா மிஷன்’ திட்டத்தின் கீழ், கிராமப்புற மற்றும் வளர்ச்சி குறியீடுகளில் பின்தங்கிய பகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் திறன் பயிற்சி, மறுதிறன் பயிற்சி மற்றும் மேம்பட்ட திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY), ஜன சிக்ஷண் சன்ஸ்தான் (JSS), தேசிய தொழிற்பயிற்சி ஊக்குவிப்புத் திட்டம் (NAPS), தொழிலாளர் பயிற்சித் திட்டம் (CTS) உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

பெண்கள் மற்றும் பின்தங்கிய சமூகத்தினருக்கு சிறப்பு கவனம்

PMKVY திட்டத்தின் கீழ், பட்டியலினத்தவர், பழங்குடியினர், பெண்கள் மற்றும் வளர்ச்சி குறியீடுகளில் பின்தங்கிய மாவட்டங்கள் உள்ளிட்ட பகுதிகளை இலக்காகக் கொண்டு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

பெண்கள், பழங்குடியினர் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள பிற விளிம்புநிலை சமூகத்தினரின் பங்கேற்பை அதிகரிக்க சிறப்பு கவனம் செலுத்தப்படுவதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. பயிற்சிக்காக பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு தங்குமிடம், உணவு மற்றும் போக்குவரத்து வசதிகளும் வழங்கப்படுகின்றன.

ஜன சிக்ஷண் சன்ஸ்தான் (JSS) திட்டத்தின் மூலம் பயனாளிகளின் இல்லத்திற்கே அருகில் முறைசாரா திறன் பயிற்சி வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தின் பயனாளிகளில் 90 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் பட்டியலினத்தவர், பழங்குடியினர் மற்றும் பிற பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். இதில் பெண்கள் 86 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

தொழிற்பயிற்சியில் பெண்களின் பங்கேற்பு அதிகரிப்பு

தேசிய தொழிற்பயிற்சி ஊக்குவிப்புத் திட்டத்தின் (NAPS) கீழ் சேவைத் துறையில் புதிய தொழிற்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் பெண்களின் தொழிற்பயிற்சி பங்கேற்பு அதிகரித்துள்ளது.

2024-25ஆம் ஆண்டில் 22.79 சதவீதமாக இருந்த பெண்கள் பயிற்சியாளர்களின் பங்கு, 2025-26ஆம் ஆண்டில் 25.80 சதவீதமாக உயர்ந்துள்ளது.

NAPS திட்டத்தின் கீழ், பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு மாதம் அதிகபட்சம் ரூ.1,500 வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்தத் தொகை நேரடி பணப்பரிமாற்றம் (DBT) மூலம் பயிற்சியாளர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது.

மேலும், நாடு முழுவதும் பெண்களுக்காக பிரத்யேகமாக 19 தேசிய திறன் பயிற்சி நிறுவனங்களும், 300-க்கும் மேற்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனங்களும் (ITIs) செயல்பட்டு வருகின்றன. அனைத்து அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும் அனைத்து பாடப்பிரிவுகளிலும் பெண்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீடு வழங்க ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

நவீன தொழில்நுட்பப் பயிற்சிக்கு முக்கியத்துவம்

இளைஞர்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில், செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திரக் கற்றல் (ML), ரோபோடிக்ஸ், மெக்காட்ரானிக்ஸ், ட்ரோன் தொழில்நுட்பம் உள்ளிட்ட Industry 4.0 சார்ந்த புதிய தலைமுறை திறன் பயிற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், 5G நெட்வொர்க் தொழில்நுட்ப வல்லுநர், செயற்கை நுண்ணறிவு நிரலாக்க உதவியாளர், சைபர் பாதுகாப்பு உதவியாளர், ட்ரோன் தொழில்நுட்ப வல்லுநர் உள்ளிட்ட புதிய பாடப்பிரிவுகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

IBM, CISCO, Microsoft, AWS உள்ளிட்ட முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, தொழில்துறைக்கு தேவையான நவீன தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திறன் பயிற்சி - வேலைவாய்ப்பு - தொழில்முனைவு

Skill India Digital Hub (SIDH) என்ற ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளம் மூலம் திறன் பயிற்சி, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவு வாய்ப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. பயிற்சி பெற்றவர்களின் விவரங்கள் இந்தத் தளத்தில் இடம்பெறுவதால், அவர்களை வேலைவாய்ப்பு வழங்குநர்களுடன் இணைக்கவும், வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சி வாய்ப்புகளைப் பெறவும் உதவுகிறது.

மேலும், கௌசல் மகோத்சவ் மற்றும் பிரதான் மந்திரி தேசிய தொழிற்பயிற்சி வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, திறன் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சி வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன.

ரூ.60,000 கோடியில் PM-SETU திட்டம்

தொழிற்பயிற்சி நிறுவனங்களை நவீனப்படுத்தும் நோக்கில் ரூ.60,000 கோடி முதலீட்டில் PM-SETU (Pradhan Mantri Skilling and Employability Transformation through Upgraded ITIs) திட்டத்தை ஒன்றிய அரசு தொடங்கியுள்ளது.

இதன் மூலம் நாடு முழுவதும் 1,000 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்கள் நவீனப்படுத்தப்பட உள்ளன. இதில் 200 மைய தொழிற்பயிற்சி நிறுவனங்களும், அவற்றுடன் இணைக்கப்பட்ட 800 தொழிற்பயிற்சி நிறுவனங்களும் ‘Hub and Spoke’ முறையில் செயல்படும். வேலைவாய்ப்பு, தொழில்முனைவு மற்றும் சுயதொழில் வாய்ப்புகளுக்கு தேவையான திறன்களை இளைஞர்கள் பெறுவதற்கு இத்திட்டம் உதவும் என ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் திறன் பயிற்சி விவரங்கள்

நாடாளுமன்றத்தில் அளிக்கப்பட்ட இணைப்புத் தகவலின்படி, கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் 2026 ஜூன் 30 வரை:

PMKVY திட்டத்தில்:

- 16 பயிற்சி மையங்கள் செயல்பட்டுள்ளன. - 5,666 பேர் பதிவு செய்துள்ளனர். - 5,540 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். - 4,201 பேர் சான்றிதழ் பெற்றுள்ளனர்.

JSS திட்டத்தில்:

- 1 பயிற்சி மையம் செயல்பட்டுள்ளது.- 5,576 பேர் பதிவு செய்துள்ளனர்.- 5,276 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். - 5,251 பேர் சான்றிதழ் பெற்றுள்ளனர்.

NAPS திட்டத்தில்:

- 505 நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன.- 1,14,521 பேர் தொழிற்பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.- 2,663 பேர் சான்றிதழ் பெற்றுள்ளனர்.

CTS/ITI திட்டத்தில்:

- 8 தொழிற்பயிற்சி மையங்கள் உள்ளன.- 1,191 பேர் பதிவு செய்துள்ளனர். - 518 பேர் பயிற்சி/மதிப்பீடு பெற்றுள்ளனர். - 439 பேர் சான்றிதழ் பெற்றுள்ளனர்.

கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள், பெண்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் தொழில்துறையின் தேவைக்கேற்ற திறன்களை வழங்கி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவு வாய்ப்புகளை அதிகரிப்பதே இத்திட்டங்களின் நோக்கம் என்று ஒன்றிய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

த.வெ.க. அரசின் மருத்துவத் திட்டங்கள்

காப்பீட்டு நிறுவனத்திற்கு சாதமாகவும் - ஊழியர்களுக்கு பாதகமாகவும் உள்ளது!

ஓய்வுபெற்ற காவல் அலுவலர் நல சங்கத்தினர் குற்றச்சாட்டு!

திருவாரூர்,ஆக.12- த.வெ.க. அரசு தற்போது அறிவித்துள்ள மருத்துவ காப்பீடு திட்டங்கள் காப்பீட்டு நிறுவனத்திற்கு சாதகமாகவும் ஊழியர்களுக்கு பாதகமாகவும், இருப்பதாக ஓய்வு பெற்ற காவல் அலுவலர் நல சங்கத்தினர் குற்றம்சாட்டியுள்ளனர்.

திருவாரூர் மாவட்ட ஓய்வு பெற்ற காவல் அலுவலர் நல சங்கத்தின் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் திருவாரூரில் நடைபெற்றது.

கூட்டத்தில் பேசிய நிர்வாகிகள் இன்றைக்கு நாட்டு மக்கள் அமைதியாகவும், பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு காவலர்களின் பங்கு மகத்தானது. ஆனால் நாட்டு மக்களுக்காக தங்களை அற்பணித்துகொண்டு இரவு பகல் பராமல் பணியாற்றும் காவலர்கள் பெறும் ஊதியம் என்பது மிகமிக குறைவானது. காவலர் பணி செம்மையாக அமைந்திடவும், அவர்களது குடும்பங்கள் நலனை பாதுகாத்திடவும் த.வெ.க. அரசு பல்வேறு சிறப்பு திட்டங்களை நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடரில் அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் தவெக அரசு புதிதாக அறிவித்துள்ள மருத்துவக் காப்பீட்டு திட்டமானது ஓய்வு பெற்ற மற்றும் பணியில் உள்ள ஊழியர்களுக்கு பாதகமாகவும், காப்பீட்டு நிறுவனங்களுக்கு சாதகமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவகாப்பீட்டு திட்டத்தில் ஊழல் முறைகேடு நடந்திருக்குமோ என ஐயம் ஏற்பட்டுள்ளதாகவும்,

மத்திய, மாநில அரசுகள் 8வது ஊதிய குழுவின் பரிந்துரையை அனைத்து ஓய்வூதியர்களுக்கும் பாகுபாடின்றி அமல்படுத்த வேண்டும், குடும்ப பாதுகாப்பு நிதியை ரூ.1.5 லட்சமாக உயர்த்தி வழங்குவதோடு, பணியில் உள்ள காவலர்களின் ஊதியம் தொடர்பாக தவெக தேர்தல் அறிக்கையில் கூறியபடி அரசு சம்பள உயர்வு வழங்க வேண்டும்.

சட்டம் ஒழுங்கு பிரச்சனையில்லாமல் இருந்திட காவல் நிலைய காவலர் பணியிடங்களை அதிகரிக்க வேண்டும், பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டுதல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திமுக ஆட்சியில் வழங்கப்பட்ட முதலமைச்சர் மருத்துவ காப்பீட்டு திட்ட பலன்கள் , இன்னுயிர் காப்போம் நம்மைகக் காக்கும் 48, இல்லம் தேடி மருத்துவம், மக்களைத்தேடி மருத்துவம் திட்டங்களைப்போல மக்களுக்கு பயன்தரும் உயிர்காக்கும் திட்டங்களை தவெக அரசு தொடர்ந்து செயல்படுத்தவேண்டும் என்பதே அனைத்து தரப்பு மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.